**தலைப்பு 414 - சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிகூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

**1.6.1 நிதி நிலைமைக் கூற்று**

**1.6.1.1 நிதியல்லா சொத்துக்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற சீதுவ பயிற்சி நிலையத்திற்குரிய கட்டிடத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 121,002,659 செலவிடப்பட்டமை, நிதியல்லா சொத்துக்களில் நடைமுறை வேலையின் கீழ் குறிப்பிடப்படாமல் வீடல்லாத கட்டிடத்தின் கீழ் கொள்வனவு செய்தலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக நிதியல்லா சொத்துக்களில் நடைமுறை வேலையின் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய தொகை வீடல்லாத கட்டிடங்கள் கொள்வனவு செய்தலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தத் தவறை சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | சொத்துக்களின் வகைப்படுத்தலை சரியாக மேற்கொண்டு சரியாக அறிக்கையிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 04 சொத்து வகைகளுக்குரிய 77 விடயங்களின் ரூபா 3,815,643 பெறுமதி சரியான சொத்து வகைப்படுத்தலின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் கணனி துணைப்பாகமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தவறினால் ஏற்பட்டுள்ளது. சரியாக சொத்து வகைப்படுத்தலின் கீழ் கணக்கீடு செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சரியாக அறிக்கையிடு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அமைச்சிற்குரிய பிலிமத்தலாவ மற்றும் பொரள்ளையில் அமைந்துள்ள ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் காணி கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணி கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | வருட ஆரம்பத்தில் ரூபா 589,293,499 தொகையான அலுவலகக் கட்டிட மீதியில் ரூபா 540,000 தொகையான சமூக பாதுகாப்பு சபை கட்டிட நிர்மாணம் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இந்த தொகை 2019 ஆம் ஆண்டில் இலங்கை சமூக பாதுகாப்பு சபை அலுவலக கட்டிடத்தின் உட்கட்டமைப்பு தன்மையை பரீட்சிப்பதற்காக அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. பொதுத் திறைசேரியால் தேவையான ஆலோசனைகளைப் பெற்று இந்த ரூபா 540,000.00 மீதியை சமூக பாதுகாப்பு சபைக்கு கையளிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக அறிக்கையிடு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2021 மார்ச் 26 ஆந் திகதி விற்றுத்தீர்த்தல் குழுவினால் இனங்காணப்பட்ட 05 வாகனங்கள் திசெம்பர் மாதத்தில் ஏனைய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் நிலையான சொத்துப் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பதிவேட்டில் இருந்து 2022 ஆம் ஆண்டில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (ஊ) அமைச்சிற்கு சொந்தமான சொத்துக்களின் கிரயம் ரூபா 6,626,616 ஆன 15 விடயங்களுக்குரிய 144 பொருள் அலகுகள் ஆண்டில் அகற்றப்பட்டதாக ACA-6 இல் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பொருட்கள் அகற்றும் பட்டியலின் பிரகாரம் 54 பொருட்களுக்குரிய 259 அலகுகள் உள்ளதாக அகற்றும் பட்டியலில் அறிக்கையிடப்பட்டிருந்தது. | பொருட்கள் அகற்றும் பட்டியலை சரியாக வகைப்படுத்தாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

### 1.6.2 கட்டுநிதி கணக்கின் மீதி

கட்டுநிதி மீதி கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ACA-3 கட்டுநிதி கணக்கு இலக்கம் 7002-0-0-324-21 ஆக பதியப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த இலக்கம் 7002-0-0-324-19 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | தவறினால் ஏற்பட்டிருந்தது. எதிர்வரும் ஆண்டில் இது தொடர்பாக கவனம் செலுத்துமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சரியாக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) திறைசேரி அச்சிடல் குறிப்பு SA-70 இன் பிரகாரம் 7002-0-0-324-20 கட்டுநிதிக் கணக்கின் முன்னைய ஆண்டின் ரூபா 2,241,771 ஆரம்ப மீதி ACA-3 படிவத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | ரூபா 2,241,771 ஆரம்ப மீதி ACA-3 படிவத்தில் உள்ளடக்காமை தவறினால் ஏற்பட்டிருந்ததுடன் எதிர்வரும் வருடத்தின் போது கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது பின்வரும் அவதானிப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2021/03 இல் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரியில் மீண்டும் சீராக்கப்பட்ட மீதி உள்ளடக்கப்பட வேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்த போதும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் ACA- C செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான ரூபா 9,372,330 தேறிய செயற்பாட்டு பெறுமதி மீண்டும் சீராக்கம் மேற்கொள்ளப்படாமல் காசுகளின் தேறிய வேறுபாடாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறினால் ஏற்பட்டிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டில் இது தொடர்பாக கவனம் செலுத்துமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள வழிகாட்டிகளின் பிரகாரம் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6.4 முற்பணக் கணக்கு மீதி

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியில் உள்ள மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அங்கத்தவர் கடன் பதிவேட்டில் 07 உத்தியோகத்தர்களுக்குரிய கூட்டுமொத்தமான ரூபா 1,680,826 ஆன கடன் மீதி கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்டோலைகளில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் 07 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 1,362,971 தொகையான கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையில் உள்ளடக்கப்பட்ட போதும் அங்கத்தவர் கடன் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பட்டோலையில் உள்ளடக்கப்படாத ரூபா 1,680,826 தொகை ஓய்வூதிய மற்றும் இடமாற்றல் சென்றமையின் காரணமாக ஏற்பட்ட நிலைமையாக இருந்ததுடன் அந்த தவறுகள் தற்போது சரிசெய்யப்பட்டுள்ளது. ரூபா 1,362,971 கடன் மீதியை CC10 பதிவேட்டில் சரியாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியாக அறிக்கையிடு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இழப்பு மற்றும் நட்ட பதிவேடு நிதிப்பிரமாணம் 110 மற்றும் 104 இன் பிரகாரம் நாளதுவரை யாக்கப்பட்டிருக்கவில்லை. | இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | இழப்பு நட்ட பதிவேடு நாளதுவரையாக்கப்படல் வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 94 இன் பிரகாரம் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல் தொடர்பாக பொறுப்பு பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துவது தொடர்பாக பொறுப்பு பதிவேட்டை நாளதுவரையாக பேணிச் செல்லுமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பொறுப்பு பதிவேடு நாளதுவரையாக்கப் படல் வேண்டும். |
| (இ) நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் அமைச்சின் 29 உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | அமைச்சின் சகல உத்தியோகத்தர்களினதும் பிணை விண்ணபங்கள் அரசாங்க சேவை பரஸ்பர உத்தரவாத சங்கத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் பதில் கிடைத்த பின்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்துரைத்த பிரகாரம் பிணை வைக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 11,458,600,000 தொகையான மூலதன நிதியேற்பாட்டில் ரூபா | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் சந்தைகளில் | மதிப்பீட்டை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | 6,694,694,598 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அரச செலவின மீளாய்வின் கீழ் அமைச்சரவை ஆலோசனையின் பிரகாரம் ரூபா 451,956,397 சேமித்தல் தவிர பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத அளவு ரூபா 4,311,949,005 அதாவது 37 சதவீதம் ஆகும். | காணப்பட்ட மூலதனப் பற்றாக்குறை, வேலைத்தளங்கள் தனிமைப்படுத்தலின் அடிப்படையில் மூட வேண்டியேற்பட்டமை, அத்தியவசிய பொருட்களின் பற்றாக்குறை, பொருட்களின் விலைகள் உயர்வடைந்து சென்றமை, கட்டுநிதி கிடைக்கப் பெறாமை என்பவற்றின் அடிப்படையில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை மற்றும் கையில் உள்ள பட்டியல்களுக்கான வைத்திருக்க வேண்டி ஏற்பட்டமை | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் பிரகாரமும், 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரமும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள மீண்டெழும் மற்றும் மூலதன நிதியேற்பாட்டின் எல்லையில் வருடாந்த செலவினங்கள் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டுமென காண்பிக்கப்பட்ட போதிலும் குறைநிரப்பு மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 5,755 மில்லியன் 02 செலவின விடயங்களுக்காக பெறப்பட்டிருந்ததுடன் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் 23.2 சதவீதம் அதாவது ரூபா 1,337,328,743 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | உரிய நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்காக கொவிட் தொற்றுநோயுடன் ஏற்பட்ட மூலப்பொருள் பற்றாக்குறையே நிதியேற்பாட்டின் சேமிப்பிற்கு அடிப்படையாக தாக்கமளித்த காரணமாகும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5(1) மற்றும் 5(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் பிரகாரம் வீரமன் நடைமுறை பின்பற்றப்பட்டு நிதியேற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 02 செலவின விடயங்களுக்குரியதாக அவ்வாறு பெறப்பட்ட பணத்தில் 37 சதவீதம் ஆண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் பிரகாரம் வீரமன் நடைமுறையின் கீழ் நிதியேற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டமை மாவட்ட செயலகங்களினால் கிடைக்கின்ற நிதியேற்பாட்டின் கோரிக்கையின் பிரகாரமாக இருந்ததுடன் எதிர்வரும் ஆண்டின் போது மாவட்ட செயலகங்களுக்கு தேவையான நிதியேற்பாடு எதிர்வுகூறி பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை எடுத்து எதிர்வரும் ஆண்டுகளின் போது இவ்வாறான வழுக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஈ) | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2021/03 இன் 3.4 ஆம் பந்திக்கு முரணாக 24 செலவின விடயங்களின் சேமிப்பு 6 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை காணப்பட்டது. | 2021 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய அரச செலவின மீளாய்வின் கீழான அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட சேமிப்பாகும். | - மேற்படி - |
| (உ) | நிதிப்பிரமாணம் 138(1) இன் பிரகாரம் உறுதிச்சீட்டை உறுதிப்படுத்திய உத்தியோகத்தரால் உரிய செலவின தலைப்பு, நிகழ்ச்சித் திட்டம், செயற்திட்டம் போன்றவைகளுக்குரிய கணக்குகளுக்கு சரியாக செலவின பொறுப்பாக இருந்தமை உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் செலவினங்கள் செயற்திட்டத்தின் பிரகாரம் வகைப்படுத்தும் போது 02 செயற்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த சந்தர்ப்பங்களில் | அமைச்சுக்கு சொந்தமான குழாம் வாகனங்கள் பொதுவாக அமைச்சின் கீழ் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்காக இருந்தமையால் உரிய செலவின விடயத்தின் கீழ் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டதன் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சரியான பிரகாரம் உரிய செலவின விடயத்தின் கீழ் உறுதிச்சீட்டுக்களை கணக்கீடு செய்வதற்கு | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| செலவினங்கள், நிகழ்ச்சித் திட்டங்களுக்கிடையே குறிப்பிடும் போது வகைப்படுத்தல் வழுக்கள் காணப்பட்ட 79 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. | உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 09 செலவின விடயங்களின் சேமிப்பு ரூபா 380,743 ஐ விஞ்சி ரூபா 1,551,496 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டின் இறுதியின் பின்னரும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காண்பிக்கப்பட்ட செலவின விடயத்திற்காக மேலதிக நிதியேற்பாடு கோரப்படாமல் 2022 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க கடப்பாடுகளுக்கு உடன்படல் வேண்டும். |
| (ஆ) பிரதேச செயலகங்களினால் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் முறைமைக்கு UPLOARD செய்யப்பட்டு பொறுப்புக்களின் மீதி ரூபா 1,391,475,563 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 2,086,571,257 ஆக இருந்தது. | மாவட்ட செயலகங்களினால் அரச கணக்குகள் திணைக்களத்தின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் முறைமையில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி ரூபா 1,391,475,563 ஆக இருந்த போதிலும் அவர்களினால் இந்த அமைச்சிற்கு உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்டுள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 2,086,571,257 ஆகும். அதன் பிரகாரம் அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |

## 2.3 முற்பணங்களைத் தீர்த்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் இயலுமை, வலுவை எதிர்பார்த்த செயற்பாடுகளின் அளவு மற்றும் உரிய செயற்பாடுகளின் செலவினங்களுக்காக அரசாங்கத்திற்கு நிதியேற்பாடு செய்ய முடியுமான நிதியின் அளவு போன்ற விடயங்களை கவனத்தில் கொண்டு முற்பண கணக்கில் குறித்துரைத்த எல்லையை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் செலவினத்தில் ஆகக்கூடிய எல்லை மற்றும் வரவு மீதியின் ஆகக்கூடிய எல்லையில் உள்ளபடியான பெறுமதி முறையே ரூபா 19 சதவீதம் மற்றும் 42 சதவீதமாக இருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு தயாரிக்கும் சந்தர்ப்பத்தின் போது இந்த அமைச்சின் பதவியணியினர் 927 ஆக இருந்ததுடன் அந்த பதவியணியினரை கவனத்தில் கொண்டு ஆகக்கூடிய செலவின எல்லை மற்றும் ஆகக்கூடிய வரவு மீதி எல்லை தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் அமைச்சின் திருத்தங்களுடன் தேசிய தொல்முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபைக்கு நியமிக்கப்பட்டிருந்த 272 எண்ணிக்கையிலான அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியணி இந்த அமைச்சின் விடயப் பரப்பிலிருந்து நீக்கப்பட்டமையின் காரணமாக திறைசேரியினால் வழங்கப்பட்ட எல்லை மற்றும் உள்ளபடியான பெறுமதிகளுக்கு இடையே இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டிற்காக உள்ளபடியான ஊழியர் திருத்தத்தை செய்வதற்கும் திறைசேரிக்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சேவையை விட்டுச் சென்று இரண்டு வருடங்களை விஞ்சியிருந்த போதிலும் தீர்த்து வைக்கப்படாத கடன் மீதி ரூபா 202,508 ஆகும். | கடனை அறவிடல் தொடர்பாக 2021.09.30 ஆந் திகதி அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கு 11 ஆவது மீள்நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளது. | கடன் பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இடமாற்றலாகிச் சென்று 03 மாதங்களை விஞ்சியதாக குறிப்பிடப்பட்ட ரூபா 53,200 கடன் மீதி 2022 சனவரி மாத கணக்கு பொழிப்புக்களின் மூலம் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**2.4 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வைப்புக் கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,814,858 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலம் பழைய ரூபா 1,059,123 வைப்பு மீதி காணப்பட்டது. 2022 ஏப்ரல் மாதம் வரையிலும் அதில் ரூபா 240,000 தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. | கேள்வி வைப்புக் கணக்கில் ரூபா 200,000 வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு 2022 ஏப்ரல் மாத கணக்கு பொழிப்புக்களில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அறிவித்து அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு பரிந்துரை கிடைத்ததும் உடனடியாக அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது பயிற்சி நிலையங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 526,472 தொகையான வருமானம் மற்றும் வதிவிட வசதிகளை வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை சேகரிக்கப்பட்ட ரூபா 157,032 தொகை அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு | பரிந்துரை கிடைத்ததும் உடனடியாக அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஆசிய மன்றத்திலிருந்து கிடைத்த ரூபா 211,000 தொகை அந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஈடுபடுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக திறைசேரி அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனை சேவையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களின் திறன்களை அபிவிருத்தி செய்யும் பயிற்சி செயலமர்விற்காக எதிர்காலத்தின் போது ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.5 வங்கி கணக்கு செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எந்தவொரு விசேட கையொப்பத்தை பெற்றுக் கொள்ளும் போதும் அதன் கீழ் செலுத்தக் கூடிய ஆகக்கூடிய அளவு தொடர்பாக வங்கிக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கவில்லை. | வங்கி கணக்கொன்றை திறக்கும் போது பின்பற்றப்படுகின்ற செயல் முறைகளின் கீழ் திறைசேரி ஊடாக வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வவ்போது மேற்கொள்ளப்படுகின்ற மாற்றங்கள் வங்கிக்கு எழுத்து மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆகக்கூடிய அளவு தொடர்பாக வங்கிக்கு ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட TOD/BA/01 படிவத்தில் 11 இன் கீழ் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நிதிப்பிரமாணம் 880 இன் படி அமைச்சின் 29 உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பழுதடைந்த மற்றும் இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பான அறிக்கை வைத்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த அறிக்கை உள்ளகக் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையை உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | உபகட்டு நிதி வழங்கப்பட்டதன் பின்னர் உரிய பணிகள் முடிவடைந்ததும் உடனடியாக கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 45 சந்தர்ப்பங்களுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 697,038 தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உபகட்டு நிதி வழங்கப்பட்ட பணிகள் நிறைவடைந்ததும் கட்டு நிதியை தீர்ப்பதற்கு செயற்பட வேண்டுமென உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 1647(அ) மற்றும் 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | அமைச்சிற்கு சொந்தமான 43 வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | தற்போது மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 26 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு வாகனங்களுக்காக பேணப்பட வேண்டிய நாளாந்த ஓட்ட அட்டவணை அல்லது மாதாந்த ஓட்ட அறிக்கை | அந்த 02 வாகனங்களினதும் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த அறிக்கை வைத்துக் கொள்ளல் தற்போது மேற்கொள்ளப் படுவதுடன் கணக்காய்விற்காக அந்த அறிக்கை | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | சம்பளம் செலுத்துதல் தொடர்பான ஆலோசனை பத்திரத்தில் சம்பளங்களை தயாரிக்கும் கணனி மென்பொருளுக்குரிய முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது நுழைவுக் குறியீடு (Pass Ward) உத்தியோகத்தர்களுக்கு இடையே பகிர்ந்தளிக்க வேண்டியமை காண்பிக்கப்பட்ட போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சம்பளம் தொடர்பான கணனி மென்பொருளுக்குரிய முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது நுழைவுக் குறியீடுகள் உரிய உத்தியோகத்தர்களுக்கு இடையே பகிர்ந்தளிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முறையான உள்ளக கட்டுப்பாட்டு திட்டம் பின்பற்றப்படல் வேண்டும். |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | நிறுவனங்களுக்கிடையே சொத்துக்களை மாற்றுதல் மற்றும் கையளித்தல் தொடர்பாக சொத்துக்களின் புத்தகப் பெறுமதியை உள்ளடக்கிய பதிவேட்டை தயாரித்தல், அதனை மாற்றுதல் கையளித்த நிறுவனத்திற்கு வழங்குதல், சொத்துக்களை மதிப்பீடு செய்தல், சீராக்கங்கள் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் சொத்துக்கள் கையளித்தல் மேற்கொள்ளும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | அமைச்சின் அகற்றல் குழுவின் மூலம் அகற்றுவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட 05 வாகனங்களின் மதிப்பீட்டு குழுவின் அறிக்கையினையும் பெற்றுக்கொண்டதன் பின்னர் சட்டரீதியாக கையளித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் நிலையான சொத்துப் பதிவேட்டிலிருந்தும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அமைச்சின் நோக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) 2020 ஒக்தோபர் 06 ஆந் திகதிய 2196/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் இராஜாங்க அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் மற்றும் இலக்குகளில் 05 விசேட முன்னுரிமைகளும் இனங்காணப்பட்டிருந்தது. அந்த விசேட முன்னுரிமைகளை அமுல்படுத்துவதற்காக 03 நியதிச்சட்ட நிறுவனங்களான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகள் மூலதனக் கம்பனி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி அதிகார சபை மற்றும் அரச வள முகாமைத்துவ கூட்டுத்தாபனம் என்ற நிறுவனங்களின் கட்டுப்பாட்டு அதிகாரம் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் இராஜாங்க அமைச்சினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி மூலதனக் கம்பனி மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி அதிகாரசபை என்ற இரண்டு நிறுவனங்களுக்கும் உரிய செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் கம்பனிகள் பதிவாளர் நாயகத்திடமும் அரச பொதுமுயற்சிகள் | இந்த இரண்டு நிறுவனங்கள் தொடர்பாக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் பிரச்சினையுடனான நிலைமை ஏற்பட்டிருந்தமையால் அது தொடர்பாக அறிவிப்பதற்காக பொருத்தமான உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு செயலாளரின் கையொப்பத்துடன் SMS/ACC/17/1/SME ஆம் இலக்க கடிதம் நிதியமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் மற்றும் இலக்குகளுக்குரிய செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்திடமும் விசாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | | |
| (ஆ) | அரச வள முகாமைத்துவ கூட்டுத்தாபன கம்பனிக்குச் சொந்தமான 2021 யூலை 15 இல் உள்ளவாறு ரூபா 1,521,370 வங்கி சாதகமான மீதியும், ரூபா 61,928,356 நிலையான வைப்பொன்றும் காணப்பட்டது. வ/ப இறப்பர் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாகவுள்ள முகாமைத்துவம் மாத்திரம் இந்த கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள 03 சொத்துக்கள் வாடகைக்கு வழங்கி ஒரு வருடத்திற்கு ரூபா 10,849,164 வாடகை வருமானம் சபையினால் 2021 யூலை 15 ஆந் திகதியில் உழைக்கப்பட்டிருந்த போதிலும் இந்த கூட்டுத்தாபனத்தின் நிர்வாகச் சபை செயற்படு நிலையில் காணப்படாதிருந்ததாக அமைச்சின் செயலாளரினால் நிதி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக காணப்படுகின்ற எல்பிட்டிய தொழிற்சாலை 20 வருடங்கள் முழுவதும் மூடப்பட்டிருந்தது. இந்த கூட்டுத்தாபனத்திற்குரிய சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை சட்டரீதியாக உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூல ஆவணங்கள் அமைச்சிடம் காணப்படாதிருந்ததாக | அரச வள முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தின் எதிர்கால செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று 2021 யூலை 22 ஆந் திகதி நிதியமைச்சில் நடாத்தப்பட்டிருந்தது. அந்தக் கலந்துரையாடலின் பின்னர் கூட்டுத்தாபனம் 2021 செப்தெம்பர் 10 ஆந் திகதிய PED/P/SRMC/1/11(i) ஆம் இலக்க கடிதத்தின் பிரதியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தற்போது செயலிழந்து காணப்படுகின்ற வ/ப அரச வள முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தை விரைவாக கலைக்குமாறு நிதியமைச்சின் செயலாளர் அறிவித்தல் வழங்கியிருந்ததாக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் இந்த அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்திற்கு பதிலாக அரச வள முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தை கலைக்கும் நடவடிக்கைகள் பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் திறைசேரி சட்ட திணைக்களத்தினதும் நேரடியான மேற்பார்வையின் கீழ் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| மேலும் நிதி அமைச்சிற்கு அமைச்சு செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ள முடியுமாயின் அது மிகவும் பொருத்தமான முன்மொழிவாக்கி ஆலோசனை வழங்கும் SMS/SRMC/ACC/16/2 ஆம் இலக்க கடிதமொன்று நிதி அமைச்சிற்கு 2021 செப்தெம்பர் 24 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | |

**3.2 செயலாற்றல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டம் | | |
| மிகவும் வறுமையானவர்களை படிப்படியாக அதிலிருந்து விடுவிக்கும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட 03 மாவட்டங்களில் 165 நலனாளிகளை இலக்காகக் கொண்டு ரூபா 16.08 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 108 நலனாளிகளுக்காக ரூபா 10.52 மில்லியன் செயல்முன்னேற்றமொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த குறித்த செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது மூன்று மாவட்டங்களை தெரிவு செய்தல் ஏககாலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் நலனாளிகளை தெரிவு செய்வதற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விடயங்கள் மற்றும் தெரிவு செய்யும் திட்ட முறைமை மற்றும் குறித்துரைத்த திட்டத்தின் | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் கீழ் தூர பிரயாணங்கள் வரையறுக்கப்பட்ட மையினால் ஒரு நாளில் கடமை நடவடிக்கைகளை பூர்த்தி செய்யக்கூடிய கொழும்பு, குருணாகல், கம்பஹா போன்ற மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் ஏக காலத்தில் தெரிவு முறையினை பயன்படுத்தி பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம சேவகர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டிருந்தது. | நலனாளிகளை தெரிவு செய்வதற்கான அடிப்படையாக கொள்ளப்பட்ட விடயங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட முறைமை மற்றும் குறித்துரைத்த செயற்திட்டத்தின் வினைத்திறனை மதிப்பீடு செய்யும் திட்ட முறைமையொன்று தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வினைததிறனை மதிப்பீடு செய்யும் திட்ட முறைமை தொடர்பாக கணக்காய்விற்கு போதியளவான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | ஏனைய வரிசை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் ஊடாக அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 672,100,000 நிதியேற்பாடு<br>---------------------------------------------- | | |
| | சமுர்த்தி இராஜாங்க அமைச்சின் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 773.9 மில்லியன் பல்வேறு நிறுவனங்களுக்கு நிதியேற்பாடாக ஒதுக்கப்பட்டு 22,215 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டில் 4 ஆவது காலாண்டு செயல் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் 13,020 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு ரூபா 686.66 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்கு உரிய கட்டுநிதி கிடைப்பதின் தாமதத்தின் காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக கையில் உள்ள பட்டியல்களின் பெறுமதி ரூபா 75,625,000 ஆகும். | கோரப்பட்ட நிறுவனங்களுக்காக உரிய நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த விடயப் பொறுப்பு நிறுவனங்களின் செயற்திட்ட திட்டமிடலின் பிரகாரம் ஒவ்வொரு செயற்திட்டத்திற்கான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ஏனைய நிறுவனங்களுக்குரிய செயற்திட்டங்கள் பிரதேச செயலாளர்கள் மூலம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சுபீட்சமான தேசிய கிராமங்களை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்<br>----------------------------------------------<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | சுபீட்சமான சமுர்த்தி கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,800 மில்லியன் செலவில் 1,250 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் 1,591 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதில் 1,436 செயற்திட்டங்களுக்காக ரூபா 733.92 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமையும் ரூபா 819.22 மில்லியன் கையில் உள்ள பட்டியல்களுக்காக உள்ளமையும் காண்பிக்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலகங்களில் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு தேவையான கட்டுநிதி கோரிக்கை ஆண்டின் இறுதியின் போது மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் நிதியேற்பாட்டு தொகையில் ரூபா 246.86 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. | இந்த ரூபா 246.86 மில்லியன் நிதியேற்பாட்டு அளவு சேமிப்பதற்கு காரணமாக நிர்மாணப் பொருட்கள் உயர்வடைந்தமை, சந்தைகளில் பொருட்கள் பற்றாக்குறையின் அடிப்படையில் ஒப்பந்தக்காரர்கள் முன்வராமை காரணமாக இருந்தது. | - மேற்படி - |
| (ii) | உற்பத்தி துறைகளை இனங்காண்பதற்காக கிராமங்களை தெரிவு செய்யும் போது ஒவ்வொரு கிராமத்திலும் காணப்படுகின்ற வளங்களின் போக்கு, உற்பத்தி | உற்பத்தி செயற்பாடுகளை அமுல்படுத்தும் போது அதனுடன் தொடர்பான மக்களின் விருப்பம் மிகவும் பிரதான வளமாகும். அதனால் மக்களின் விருப்பத்தை | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முரண்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி செய்யும் இயலுமை அல்லது காணப்படுகின்ற உற்பத்தியின் அடிப்படையாகக் கொள்ளுதல் அல்லது கிராமங்களை தெரிவு செய்யும் செயற்பாடுகளாக இருந்தமையும் உற்பத்தியை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கான மூலப்பொருட்கள் அநேகமாக காணப்படுகின்றமை, பூகோள, காலநிலை பிரதேசங்களின் பிரகாரம் மிகவும் அருகதையான உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கு காணப்படுகின்ற முரண்கள் போன்றவற்றை கவனத்தில் கொள்ள வேண்டிய விசேட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தமையும் பிரதேச செயலகங்கள் சிலவற்றில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. உதாரணம் ஹோமாகம - தெங்கு சார்ந்த உற்பத்தி கிராமம். | அடிப்படையாகக் கொண்டு அநேகமாக தீர்மானிக்கப்படுவதன் மூலம் பிரதேச செயலாளர்களினால் உற்பத்தி கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தது. எனினும் எதிர்காலத்தில் கிராமங்களை இனங்காணும் போது குறிகாட்டிகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதற்கு பிரதேச செயலாளர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | கொழும்பு மாவட்டத்தில் ஹோமாக பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் சுற்றறிக்கையின் படி தனிநபர் ஒருவருக்காக ரூபா ஒரு இலட்சம் அளவில் வழங்கப்பட வேண்டிய போதிலும் ஒரு இயந்திரத்தின் பெறுமதி ரூபா 605,000 ஆன தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் 08 இயந்திரங்கள் 08 | சுபீட்சமான தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்தும் சங்கத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்த துடன் அதன் பின்னர் கைத்தொழிலை செய்து கொள்ளும் நோக்கில் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. எந்தவொரு உபகரணமும் தனிப்பட்ட அங்கத்தவர்களுக்கு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | நலனாளிகளுக்காகவும், நலனாளிகள் இருவருக்காக தென்னம் பலகை கூறாக்கும் இயந்திரத்தை வழங்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 175,000 பெறுமதியான தென்னம் பலகை வெட்டும் இயந்திரமொன்று நலனாளி ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் தேவையான மூலப்பொருட்கள் இன்மையினால் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாத நிலைமை காணப்படுவதாக 2021 திசெம்பர் 14 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் செயற்பாடுகள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் சௌபாக்கிய சங்கம் மூலம் மேற்கொள்ளப் படுகின்றது. | |
| (ஈ) | சுபீட்சமான உற்பத்தி கிராமம் சார்ந்த - பொது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்<br>------------------------------------------------<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | பொது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் போது 2021 ஆம் ஆண்டில் வேலை பூர்த்தி செய்யக்கூடிய முன்மொழிவுகள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருந்ததாகவும் எதிர்வரும் ஆண்டிற்காகவும் தொடர் வேலை செய்யாதிருப்பதாக அறிவித்திருக்கும் போது 03 பிரதேச செயலகங்களின் 05 செயற்திட்டங்களுக்குரியதாக கூட்டுமொத்தமாக ரூபா 8,995,587 கையில் உள்ள பற்றுச்சீட்டுக்கள் ஆகும். | ஆண்டின் இறுதிக் காலத்தில் காணப்பட்ட நிர்மாண மூலப்பொருட்களின் பற்றாக்குறை, கட்டுநிதி கிடைக்கப்பெறாமை போன்றவற்றின் காரணங்களின் அடிப்படையில் நிர்மாண செயற்திட்டங்களில் சில தாமதங்கள் ஏற்பட்டிருந்தன. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ii) | திம்பிரிகஸ்யாய, கிருலப்பனை இலைக்கஞ்சி/ பாரம்பரிய மருந்து உற்பத்தி போன்ற சுபீட்சமான உற்பத்தி செயற்திட்டங்களுக்கு முன்னுரிமைத் தேவைக்காக புதிய உற்பத்திக் கூடமொன்றை நிர்மாணிப்பதற்கு இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்த தேவை தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் மீளாய்வாண்டிற்காக நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,000,000 தொகையில் ரூபா 1,488,402 செலவில் காணப்படுகின்ற உற்பத்திக் கூடத்திற்கு அருகாமையில் உள்ள உடைந்த வீதி பழுதுபார்க்கப்பட்டு ரூபா 1,511,598 தொகையான மிகுதிப் பணம் நிதி அமைச்சினால் மீள பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சுபீட்சமான உற்பத்தி கிராமங்களின் மக்கள் வாழ்வாதார அபிவிருத்திக்கு நேரடியாக பங்களிக்கின்ற பொது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது மூலப்பொருள் பற்றாக்குறை, இறக்குமதி கட்டுப்பாடு, சந்தைகளில் விலை எண்ணிக்கை தளம்பலடைந்தமை அடிப்படையில் அவ்வவ்போது மதிப்பீடு திருத்தப்பட்டமையின் காரணமாக இந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 1,511,598 நிதியேற்பாடு கொழும்பு மாவட்ட செயலாளரால் மீள கையேற்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (iii) | 2021 செப்தெம்பர் 29 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாம் ஒப்பந்தங்களை கையளித்தல் பரிந்துரையின் போது உரிய ஒப்பந்தகாரருக்கு நிதி வசதிகள் உள்ளமை வங்கி கூற்றின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எனினும் | பெறுகை செயற்பாடுகள் தொடர்பான பொறுப்புக்கள் கையளிக்கப்படுவது உரிய நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துகின்ற நிறுவனத்திற்காகும். மேலும் இந்த அமைச்சின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது உரிய பிரமாணங்கள் மற்றும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள், திணைக்கள | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தகாரரின் அனுபவம், வேலை தொடர்பான நியமம் தொடர்பாக ஏற்றுக்கொள்ள கூடிய சான்றுகள் காணப்பட வேண்டியிருந்ததுடன் ஒரு வருடத்திற்கு முன்னர் கையளிக்கப்பட்டிருந்த போதும் பூர்த்தி செய்யப்படாதுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் மற்றும் ஏனைய பணிகளின் உப ஒப்பந்தங்கள் வழங்காதிருப்பதற்கு சங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட உறுதிக்கூற்றுக்கள் தொடர்பாகவும் திணைக்கள தலைவர் மற்றும் பிரதேச செயலாளரால் பெயரிடப்பட்ட இரண்டு முகவர்களை உள்ளடக்கிய மூன்று பேர் குழுவொன்றின் மூலம் ஏற்றுக் கொள்ளப்படுமாயின் ஒப்பந்தம் கையளிக்க முடியுமென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் ஹோமாகம, பாதுக்க மற்றும் கடுவெல பிரதேச செயலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்குரிய செயற்திட்டங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | ஆலோசனைகள் மற்றும் அரசின் மூலம் காலத்திற்கு காலம் விநியோகிக்கப்படுகின்ற ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய செயற்திட்டத்தை அமுல்படுத்துகின்ற நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (iv) | சுபீட்சமான உற்பத்தி கிராமம் சார்ந்த மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கு நேரடியாக பங்களிப்பு வழங்குகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் இந்த செயற்திட்டத்தின் நோக்கமாக இருந்த போதும் அதற்கு முரணாக சுபீட்சமான உற்பத்திக் கிராமங்களுக்கு புறம்பாக பிரதேசங்களில் வீதிகள் | இவ்வாறான உற்பத்திக் கிராமங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் அல்லாதிருந்ததுடன் இந்த செயற்திட்டத்திலிருந்து பிரதேசத்தின் மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் நீண்டகாலமாக அபிவிருத்தி செய்வதற்கு முடியாது காணப்பட்ட பிரதேச | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் சரியான பிரகாரம் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணம் மற்றும் பக்க சுவர் மற்றும் வடிகாண் முறைமை அமைத்தல், விடேச செயற்திட்டம் என பெயரிடப்பட்டு மீளாய்வாண்டின் போது 04 செயற்திட்டங்களுக்காக ரூபா 5,306,972 செலவிடப்படடிருந்தது. | மக்களின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டங்களாகும். | |
| (உ) | கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்<br>----------------------------------------------<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | சமுர்த்தி உற்பத்திக் கிராமம் மற்றும் சுபீட்சமான உற்பத்தி தொகுதி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 50 மாதிரி கிராமங்களில் மக்களின் வாழ்க்கை நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக ஆராய்ச்சியொன்றை மேற்கொள்ளல் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 25 மாதிரிக் கிராமங்கள் தொடர்பாக மாத்திரம் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | நாட்டில் தோன்றிக் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக 2021 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட படி செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ii) | இலங்கையில் கிராம அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிக்கும் நோக்கத்தில் நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 50.36 மில்லியன் தொகையில் நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான 08 செயற்பாடுகளுக்காக நிதியேற்பாட்டுத் | பொறள்ளை பிரதான அலுவலகம் பல வருட காலமாக திருத்தங்கள் மேற்கொள்ளாமையினால் அந்த செயற்பாடுகள் இந்த வருடத்தில் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் பொரள்ளை மற்றும் பிலிமத்தலாவ நிறுவனம் வெளி சேவையினை வழங்கி அரசாங்கத்திற்கு வருமானத்தினை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அபிவிருத்தி செய்து | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| தொகையில் 1.6 சதவீதம் அதாவது 0.83 மில்லியன் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தது. மிகுதி 82.6 சதவீத நிதியேற்பாட்டுத் தொகையில் 10.6 சதவீதம் கட்டிடங்களை பழுதுபார்த்தலுக்கும், அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும், 72 சதவீதம் மீண்டெழும் செலவினத்திற்கும் செலவிடப்பட்டிருந்தது. வெளி நிறுவனங்களுக்கு சேவையினை வழங்கியதால் மீளாய்வாண்டில் ரூபா 538,378 வருமானம் பெறப்பட்டிருந்ததுடன் இந்த நிறுவனத்தை தாபிக்கும் நோக்கம் மற்றும் பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக நேரடியாக செலவிடப்பட்ட பணம் 1.6 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | வருமானத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் அந்த விடுதிகளுக்காக உபகரணங்களை கொள்வனவு செய்தலும் 2021 ஆம் ஆண்டின் பணத்தை செலவிடுவதற்கு ஏற்பட்டிருந்தது. | |

### 3.3 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமுர்த்தி இராஜாங்க அமைச்சின் செலவினத் தலைப்பிற்கு மேலதிகமாக தலைப்பு 240 இன் கீழ் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் சமுர்த்தி நலனாளி குடும்பங்கள் இரண்டு இலட்சம் பேரை வலுப்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 5,750 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 4,691,980,006 சகல மாவட்ட செயலகங்களுக்கும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் விடுவிக்கப்பட்ட மொத்த | வழங்கப்பட்ட ரூபா 5,750 மில்லியன் நிதியேற்பாடு மாவட்ட மற்றும் ஏனைய வரிசை அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 25 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 102,071,740 தொகை மீள கையேற்று இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக அரசாங்கம் ஒதுக்கியிருந்த நிதியேற்பாட்டில் ஆகக்கூடிய அளவில் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் சரியான பிரகாரம் அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாடுகளில் ரூபா 102,071,740 தொகை மீள கையேற்கப்பட்டிருந்தது. செலவிடப்பட்ட பணத்தில் ரூபா 433,337,832 தொகை 2021/2022 வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. | மேலதிகமாக நிதியேற்பாடு கோரப்பட்ட மாவட்டத்திற்காக அந்த நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | சமுர்த்தி நலனாளி குடும்பங்கள் இரண்டு இலட்சம் செயற்திட்டம் தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 33.5 மில்லியன் நிதியேற்பாடுகுளில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இல்லாத பிரதான அலுவலகத்தின் தேவைக்காக 02 தேக்கு அலுமாரிகள் கொள்வனவு செய்தல் மற்றும் அலுவலக மேசைத் துணிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 227,788 தொகையும், சமுர்த்தி ரன்பத் சான்றிதழ் அச்சிடுவதற்காக ரூபா 7,143,750 தொகையும் திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்தது. சமுர்த்தி ரன்பத் சான்றிதழ் கையளித்தல் தொடர்பாக முறையான எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டில் ‘‘சமுர்த்தி நலனாளிகள் குடும்பங்கள் 200,000 கேந்திரமாகக் கொண்ட முழுமையாக தங்குமிட வசதிகள் பொருளாதார ரீதியிலும் மற்றும் அண்மித்த கிராமங்களில் வலுவூட்டுதல்’’ ஆக பாதீட்டு முன்மொழிவொன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 3.4 இழப்பு மற்றும் நட்டம் தொடர்பான பரீட்சிப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 செப்தெம்பர் 24 ஆந் திகதி விபத்திற்குட்பட்ட வாகனம் தொடர்பாக நிதிப் | 2017 பெப்ரவரி 09 ஆந் திகதி ஆரம்ப பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஆலோசனைகளின் |

| | | | |
|---|---|---|---|
| | பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை விபத்து ஏற்பட்டு 02 வருடங்களுக்கு பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் முழுமையான அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் நிதிப்பிரமாணம் 105, 106 இன் பிரகாரம் செயற்படுதல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. 2021 திசெம்பர் 31 வரை 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் விபத்திற்குட்பட்ட இந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் விபத்து தொடர்பாக காப்புறுதி இழப்பீடு கோரிக்கை கோரல் 06 வருடங்களுக்கு பின்னர் 2020 ஒக்தோபர் 26 ஆந் திகதி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ அல்லது கைவிடுவதற்கோ உள்ள நட்டங்கள் தொடர்பான கூற்றில் இந்த விபத்து தொடர்பான விடயங்கள் அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. திடீர் விபத்து இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடம் கோருவதற்குரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இழப்பு மற்றும் நட்ட பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளருக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனம் 2021 ஏப்ரல் 17 ஆந் திகதி அநுராதபுரம் தஹயாகம இல் விபத்திற்குட்பட்டிருந்த துடன் கெப் வண்டியின் முகவர் நிறுவனத்தினால் பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 371,945 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த கால எல்லையில் கொவிட் தொற்று நோய் பரவி காணப்பட்டதுடன் நடமாடும் வரையறை விதிக்கப்பட்டமையாலும் சாரதி கொவிட் பாதிப்பிற்கு உட்பட்டமை காரணமாகவும் விசாரணை நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | காப்புறுதி இழப்பீடாக ரூபா 263,508 பெறப்பட்டிருந்தது. பழுதுபார்ததல் செலவினத்தில் மிகுதியான ரூபா 108,411 தொகை அமைச்சினால் முகவர் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் விபத்திற்குரிய நிதிப் பிரமாணம் 104(3) இன் பிரகாரம் விசாரணையொன்று விபத்து ஏற்பட்டு 06 மாதங்களுக்கு பின்னர் அதாவது 2021 செப்தெம்பர் 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (இ) | 02 வாகனங்கள், 03 சந்தர்ப்பங்களின் போது விபத்திற்கு உட்பட்டமை தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | விபத்திற்கு உட்பட்ட 02 வாகனங்களும் எவை என்பது தொடர்பான விபரங்கள் வழங்காதிருந்தமையால் தகவல்கள் கண்டறிய முடியாதிருந்தது. | - மேற்படி - |
| (ஈ) | 2021 மார்ச் 10 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்ட ஜீப் வண்டிக்கு ரூபா 18,400 தொகையான இழப்பு தொடர்பாக நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் நட்டம் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | இழப்பு மற்றும் நட்ட பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தவறினால் தகவல்கள் கணக்குகள் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | - மேற்படி - |
| (உ) | 2020 இன் பொருள் மெய்மையாய்வு சபை அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 138,000 தொகையான இராஜாங்க அமைச்சு அலுவலகத்தில் Dialog I phone 64 GB (90)01 தொலைபேசியின் பற்றாக்குறை இழப்பு மற்றும் நட்டம் தொடர்பான | 2022 ஏப்ரல் 20 ஆந் திகதி முன்னாள் அமைச்சர் அந்த தொலைபேசி தொலைந்து போயிருந்ததாக தொலைபேசி ஊடாக அறிவித்திருந்ததுடன் அதற்குரிய பொலிஸ் அறிக்கையை வழங்குவதாகவும் அறிவித்திருந்தார். | - மேற்படி - |

பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்த துடன் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைத் திட்டத்தை தயாரிக்கும் போது அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) மற்றும் 4.2.2(அ) இன் பிரகாரம் பெறுகை செயற்பாடுகளை விரிவாகவும் மற்றும் பெறுகை கால அட்டவணையில் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் பெறுகைத் திட்டங்களை தயாரிக்கும் போது காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு முரணாக 10 சந்தர்ப்பங்களிள் போது கூட்டுமொத்தமாக ரூபா 11,037,137 பெறுமதியான அலுவலக உபகரணங்கள், கணனி மற்றும் கணனி உபகரணங்கள் 2021 யூலை 05 ஆந் திகதிய அமப/21/1118/313/036 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அரச வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | இலங்கை அரச வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்திலிருந்து 2021 யூலை 05 ஆந் திகதிய அமப/21/1118/313/036 ஆம் இலக்க மற்றும் 2020 யூன் 18 ஆந் திகதி அமப/20/08887/218/011 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மான பத்திரங்களின் மூலம் ரூபா 50 மில்லியன் வரை பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த நிறுவனத்திலிருந்து கூறுவிலைகளைக் கோரி கணனி மற்றும் கணனி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |

## 4. சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 வரையில் சமூகம் சார்ந்த மற்றும் உற்பத்தி சேவை முன்னுரிமை கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 5,000 ஏற்படுத்துவதன் மூலம் அந்தக் கிராமத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை நிலையை கட்டியெழுப்புவதற்காக மக்களின் வாழ்வாதாரத்தினை இரண்டு மடங்காக்கும் நோக்கில் சனாதிபதி செயலகத்தின் மூலம் கிராம சக்தி மக்கள் தொழில்முயற்சியை அமுல்படுத்துவதற்காக 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தன. 2020 யூன் 30 ஆந் திகதி வரையில் வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டின் கூட்டுமொத்தம் ரூபா 2,391.90 மில்லியன் ஆகும். 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச செயலாளர்களால் அனுப்பப்பட்ட அறிக்கையின் பிரகாரம் 12 மாவட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ள கிராம சக்தி சங்கங்களின் எண்ணிக்கை 1975 ஆக இருந்ததுடன் அத்திகதியில் காணப்பட்ட காசுமீதி ரூபா 791,789,538 ஆகவும் கிராம சக்தி பணியகத்திற்குரியதாக அறவிட வேண்டிய சுழற்சி நிதியக் கடன் மீதி ரூபா 200,394,099 தொகையும் ஆகும். அந்த சங்கங்களில் தற்போது வரையில் 999 சங்கங்கள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. | சகல மாவட்ட செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்ட 2021 நவம்பர் 11 ஆந் திகதிய SDB/03/GS/Dist-02 ஆம் இலக்க கடிதம் மூலம் தொடர்ச்சியாக செயற்படுகின்ற சங்கங்களுக்காக சுழற்சி நிதிய செயற்பாடுகளை தொடர்ச்சியாக அமுல்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கிராம சக்தி சங்கங்களை அமுல்படுத்து வதற்காக பொருத்தமான வேலைத்திட்ட மொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கிராம சக்தி பணியகத்திற்குச் சொந்தமான பல்வேறு விடயங்களில் 49 வகைகளுக்குரிய அலுவலக உபகரணங்களில் 519 அலகுகள் காணப்பட்டதுடன் அந்த அலுவலக உபகரணங்களில் 14 விடயங்களுக்குரிய பொருள் அலகுகள் 38 மாத்திரம் சௌபாக்கிய பணியகத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மிகுதி சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2021 ஆம் ஆண்டில் சௌபாக்கிய பணியகத்திற்காக அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 5,717,938 செலவிடப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் ரூபா 5,300 மில்லியனுக்காக சுபீட்சமான நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தேவையான வசதிகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக இந்த செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை உரிய பிரகாரம் அமுல்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அமைச்சிற்கு உரித்தான நிறுவனங்கள் மாற்றமடைவதற்கு முன்னர் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்பட்ட கிராம சக்தி அலுவலகத்தின் செயற்பாடுகள் இந்த அமைச்சிற்குரிய சௌபாக்கிய பணியகமாக நியமிக்கப்பட்டிருந்தது. எனினும் சனாதிபதி செயலகத்திலிருந்து கிராம சக்தி அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட டபள் கெப் வண்டி மற்றும் வான் வண்டி என்பன சௌபாக்கிய பணியகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2020 செப்தெம்பர் 17 ஆந் திகதிய SMS/ADM/TRS/02பொது ஆம் இலக்க கடிதத்தில் தோட்ட வீடுகள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சிற்கு வாகனங்களை வழங்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை அந்த அமைச்சினால் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததாக அறிவித்தமையால் எனது சம இலக்கம் கொண்ட 2020 ஒக்தோபர் 09 ஆந் திகதிய கடிதத்தில் இந்த அமைச்சிற்குரிய வாகனங்களை வழங்குமாறு சனாதிபதி அலுவலகத்திற்கு கோரிக்கை | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை பதில் கிடைக்கப்பெறவில்லை என அறியத்தருகின்றோம். | |

## 5. முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செயற்படு குத்தகை முறையின் கீழ் அமைச்சிற்காக தனியார் நிதிக் கம்பனியிலிருந்து 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது 05 வருட காலத்திற்காக இரண்டு வாகனங்கள் பெறப்பட்டிருந்தன. இந்த இரண்டு வாகனங்களுக்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 13,542,304 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மாதாந்தம் ஆகக்குறைந்தது ஓடப்பட வேண்டிய தூரம் கிலோமீற்றர் 3,000 அளவு ஓடப்பட்டிருக்கவில்லை. செலவின அறிக்கையின் பிரகாரம் அமைச்சின் குழாம் வாகனம் ஓடுதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படும் போதும், குழாம் வாகனங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த முடியாதிருந்த போதும், அமைச்சிற்கு சொந்தமான வாகனங்கள் ஏனைய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருக்கும் போதும் குத்தகை அடிப்படையில் வாகனங்கள் பெறப்பட்டு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் குத்தகை தவணைப் பணமாக ரூபா 13,542,304 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையினால் ஊடரங்குச் சட்டம் விதித்தல், நடமாடும் வரையறை போன்ற காரணங்களினால் களக் கடமைகள் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களை ஓடுதல் வரையறுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் வாகனங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்கள் / மிகை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 25 | 26 | +01 |
| மூன்றாம் நிலை | 01 | 04 | +03 |
| இரண்டாம் நிலை | 16 | 283 | +267 |
| ஆரம்ப நிலை | 18 | 55 | +37 |
| | 60 | 368 | 308 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மூன்றாம் நிலையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையாக இருந்த போதிலும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட நிர்வாக உத்தியோகத்தர் பதவியையும் உள்ளடக்கிய 03 பதவிகள் மிகையாக காணப்பட்டன. | பதவியணியினரை அங்கீகரித்து தருமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு மீண்டும் மீண்டும் அனுப்பப்பட்ட போதும் இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | செயற்பாடுகளை துரிதப்படுத்தி நிர்வாக பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும். |
| (ஆ) இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலையில் பதவிகள் முறையே 16 மற்றும் 18 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான பதவியணயினர் முறையே 283 மற்றும் 55 ஆக அங்கீகரிக்கப்பட்ட அளவினை விஞ்சி 304 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 செப்தெம்பர் 04 ஆந் திகதிய DMS/SM/02 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் இந்த அமைச்சு மக்கள் கேந்திர ரீதியான அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் குறிப்பிடப்பட்ட பணிகள், இலக்குகள், முன்னுரிமை மற்றும் அதற்குரிய இலக்கை அடைந்து கொள்ளும் போது உரிய துறைகளில் விசேட அறிவு மற்றும் திறன்களையுடைய பதவியணியினரின் பங்களிப்பொன்று தேவையாக இருந்தமையும், இந்த விடயங்களை கவனத்தில் கொண்டு பதவியணியினரை திருத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையும் அதற்காக முறையான பிரகாரம் முன்மொழிவொன்று சமர்ப்பிக்குமாறு காண்பித்திருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | உரிய துறைகளில் விசேட அறிவு மற்றும் நிபுணத்துவத்தை உடைய பதவியணியினர்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி தற்போது உள்ள உள்ளபடியான பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்காக அமைச்சினால் 2021 சனவரி 19, 2021 சனவரி 11 மற்றும் 2021 ஆகஸ்ட் 02 ஆந் திகதிய SMS/ADM/01/2/1-2019 ஆம் இலக்க கடிதம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடல் நடாத்தப்படுகின்றது. பதவியணியினரை அங்கீகரித்து அனுப்புதல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். | செயற்பாடுகளை துரிதப்படுத்தி நிர்வாக பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் 2022 ஆம் ஆண்டு வரையிலும் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | | |
| (உ) | 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி அலுவலக சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சரின் உதவி பதவியணியினரின் உள்ளடக்கம் மற்றும் அளவு காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த எண்ணிக்கையில் உள்ளடக்கப்படாத வீடியோ கெமரா செயற்படுத்துனர், தொழிற்சங்க இணைப்புச் செயலாளர், கெமரா உதவியாளர் போன்ற பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு அவர்கள் அமைச்சின் பதவியணியினரில் நியமிக்கப்பட்டு சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. | தொழில்சங்க இணைப்பு செயலாளர், அமைச்சரவை குறிப்பின் மூலம் நியமிக்கப்பட்டுள்ளார். வீடியோ கெமரா செயற்படுத்துனர் மற்றும் கெமரா உதவியாளர் போன்ற பதவிகள் அமைச்சு பதவியணியில் தற்காலிக பதவிகளாக காண்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சரின் உதவி பதவியிணியினர் எண்ணிக்கையில் உள்ளடக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சாத வகையில் கண்காணித்தல் வேண்டும். |